மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தொடர்ந்து அறிவித்துக் கொண்டிருக்கின்றேன். செய்தித்தாளில் நீங்கள் படிக்கவில்லை என்று கருதுகின்றேன். அரசின் கவனத்திற்கு வந்தவுடன், நான் நிறைய பேருக்கு நிவாரணம் கொடுத்திருக்கிறேன். வேண்டுமென்றால் அதன் விவரங்கள்கூட இருக்கின்றன. இதுவரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக, அந்தந்தப் பகுதியிலே மின்சாரம் தாக்கப்பட்டிருந்தாலும் சரி அல்லது விஷப் பூச்சிகளால் தாக்கப்பட்டிருந்தாலும் சரி அல்லது இப்படி இயற்கை இடர்பாடுகளால் உயிரிழந்தவர்களாக இருந்தாலும் சரி, இதுகுறித்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தவுடன் பட்டியலிட்டு அறிவித்திருக்கின்றேன். பல பேருக்கு அறிவித்திருக்கின்றேன். ஆக, எங்களிடத்திலே நிலுவைகளே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இருந்தாலும், சட்டமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றபோது, ஆங்காங்கே சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலே அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் நிவாரணம் கேட்டு மனு கொடுக்கின்றார்கள். நம்முடைய மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்ததன் அடிப்படையிலே நான் இதையெல்லாம் இங்கே அறிவித்திருக்கின்றேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அவ்வளவுதான் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, அவ்வளவுதான் உட்காருங்கள். (குறுக்கீடு) அதைப் பார்க்கலாம், இருங்கள். நீங்கள் கொடுத்திருந்தால், அதை அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ளும், உட்காருங்கள். (குறுக்கீடு) சிறப்புக் கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) உட்காருங்கள், உங்களுக்கு announce செய்தாகிவிட்டது, உட்காருங்கள்.

(இ) விழுப்புரம் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணியை விரைவுபடுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிறப்புக் கவன ஈர்ப்பு. திருச்சி–சென்னை நெடுஞ்சாலையில் விழுப்புரத்தில் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணியை விரைந்து முடிக்க வேண்டிய அவசியம் குறித்து மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள், விதி 55–ல் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இதை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.

முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலை 45–ல், விழுப்புரத்தில் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி பல ஆண்டுகளாக நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது. இன்னும் முடியவில்லை. அதற்கு நான் மாவட்ட ஆட்சியர் அவர்களைக்கூட கேட்டேன். ஜனவரியில் நாங்கள் மேம்பாலத்தை திறந்தே விடுவோம் என்று சொன்னார். ஆனால், பத்திரிகைகளுக்குச் செய்தி வெளியிடுகின்றபோது, என்னை மீறிய சக்திகள் இருக்கின்றன. என்னால் ஜனவரியில் திறக்க முடியவில்லை என்று அவரே சொன்னார். அங்கேயிருக்கின்ற வியாபாரிகளெல்லாம்கூட ஒரு நாள் உண்ணாவிரதம் இருந்தார்கள். நாங்களே எல்லோரும் சென்று, மாவட்ட ஆட்சியரிடம் இதைப்பற்றிச் சொன்னோம். இங்கேகூட மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு இதுகுறித்து முதலிலேயே நான் எழுப்பியிருக்கிறேன். அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினரான அமைச்சர் இப்போது இல்லை. அவரிடமும் நாங்கள் சொல்லியிருக்கிறோம். அவரும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாக சொல்லியிருக்கிறார். நான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, அந்த நகரத்திலே இருப்பவர்களுக்கு இது மிகுந்த பாதிப்பை உருவாக்கிக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், அருள்கூர்ந்து இதில் தனிக் கவனம் செலுத்தி, விசாரித்து உடனடியாக இரயில்வே மேம்பாலத்தை கட்டி முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மேலும், நான் இதே மன்றத்தில் மற்றொன்றைக் கேட்டிருந்தேன். திருக்கோவிலூரிலிருந்து சென்னைக்கு வருகின்றபோது புறவழிச் சாலையிலே ஓர் இணைப்பை உருவாக்க வேண்டும். அதற்கு இடமெல்லாம்கூட பெறப்பட்டிருக்கிறது. அதையும் தயவுசெய்து நீங்கள் கவனத்தில் கொண்டு செய்து தருமாறு உங்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையின் அடிப்படையில் இரயில்வே கடவு எண் 2–ல் புதிதாக மேம்பாலம் அமைக்க கருத்துரு பெறப்பட்டு, இரயில்வே பணிகள் திட்டம் 2010–2011–ல் மேம்பாலம் அமைக்க ரூ.31.60 கோடி மதிப்பில் நிருவாக அனுமதி 10–11–2010 அன்று வழங்கப்பட்டது.*

தலைமைப் பொறியாளர் (நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், சென்னை அவர்களால் 26—2—2014—ல் ரூ.34.75 கோடிக்கு இப்பணிக்கான தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணிக்கான வேலைத்தளம் 25—11—2014 அன்று ஒப்படைக்கப்பட்டது. பாலப் பணிகளின் அனைத்து மேல் தள (Deck Slap) பணிகள் முடிக்கப்பட்டு, தற்போது சென்னை மார்க்கத்தில் அணுகு சாலை அமைக்கும் பணி, தடுப்புச் சுவர் மற்றும் சேவைச் சாலை அமைக்கும் பணிகள் முடிவுற்றன.

நண்பகல் 12—00

விழுப்புரம் மார்க்கத்தின் அணுகு சாலை மற்றும் சேவைச் சாலை அமைக்க 42 நபர்களிடமிருந்து 1411.00 சதுர மீட்டர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, அப்பகுதிகளில் வலுவூட்டப்பட்ட தரைத்தள தடுப்புச் சுவர் (Reinforced Earth Wall) மற்றும் அணுகு சாலை அமைக்கப்பட்டு வருகிறது. இப்பகுதியில் விழுப்புரம் நகராட்சியின் பாதாளச் சாக்கடை குறுக்கிடுகிறது. இதனை மாற்றி அமைக்கும் பணி, விழுப்புரம் நகராட்சிமூலம் நடைபெற்று வருகிறது. இப்பணி முடிவடைந்தவுடன், விழுப்புரம் பகுதியில் அணுகு சாலை அமைக்கும் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு, விரைவில் பாலம் பொது மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(ஈ) திருச்சி பால் பண்ணை—துவாக்குடி சேவைச் சாலை அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிறப்புக் கவன ஈர்ப்பு. திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் தொகுதி, திருச்சி பால் பண்ணை துவாக்குடி சேவைச் சாலை திட்டம் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சக்கரபாணி மற்றும் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் விதி 55—ன்கீழ் அறிவிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள்.

திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பலமுறை இந்த அவையிலே என்னுடைய